தமிழ் நாடு சட்டப் பேரவை.

வியாழக்கிழமை, 1972 டிசம்பர் 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பெ. சீனிவாசன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

இளைஞர் அணி பெண் தொண்டர்கள்.

*61 வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளைஞர் அணியில் பெண்களும் பயிற்சி பெற்றுப் பணியாற்றுகின்றனரா ?

(இ) ஆம் எனில், மாவட்டவாரியாக எத்தனை பேர் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:

(அ) ஆம்.

(இ) சமூகத்தொண்டு செய்துவரும் இளைஞர் அணிபெண் தொண்டர்களின் எண்ணிக்கை விவரம் மாவட்ட வாரியாகக்கீழே கொடுக்கப்பட்டுள்ளது 1—11—1972 முடிய):—

சென்னை	40
செங்கை	18
வட ஆற்காடு	13
தென் ஆற்காடு	14
தர்மபுரி	7
சேலம்	18
கோவை	27
நீலகிரி	7
தஞ்சை	29
திருச்சி	35
மதுரை	31
ராமநாதபுரம்	16
திருநெல்வேலி	18
கன்னியாகுமரி	15
	288 (190 + 98).

திரு. பி. எஸ். மணியன் : இளைஞர் அணியின் வேலைத் திட்டம் என்ன ? பயிற்சிக் காலம் எவ்வளவு ? பயிற்சி முடிந்த பிறகு அரசு அவர்களுக்கு நிரந்தரமாக உத்தியோகம் கொடுக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்களுடைய முக்கியப் பணிகள்—முதியோர் கல்வித் திட்டம் ; கிராமங்களில் சுற்றுப்புறச் சுகாதாரம் ; கிராம இளைஞர் சங்கங்களை ஏற்படுத்தித், தீண்டாமை, உச்ச சமூக அநீதி ஆகியவற்றை எதிர்த்துப் பிரசாரம் செய்தல், நவீன அறிவியல் நோக்குடன் வேளாண்மை மற்றுமுள்ள பிரச்சினைகளை அணுகுதல் ஆகியவையாகும். அவர்களுடைய பயிற்சிக் காலம் ஒரு மாதமாக இருந்தது இப்போது இரண்டு மாதங்களாக ஆக்கப்பட்டிருக்கிறது. பயிற்சிக் காலத்திற்குப் பிறகு இவர்கள் இந்த இளைஞர் அணியில் இரண்டு ஆண்டுகள் பணியாற்ற வேண்டுமென்று இப்போது வரையறுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சொ. காவேரி மணியன் : இவர்கள் யாருடைய தலைமையில்கீழ் பணிபுரிகிறார்கள் ? பொதுவாக இவர்களுடைய அலுவல்கள் சட்ட மன்ற உறுப்பினர்களுடைய அலுவல்களுக்கு ஒத்து இருப்பதால் இவர்கள் என்னென்ன வேலைகளைச் செய்கிறார்கள் என்பதைச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்க வேண்டுமென்ற முறை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சோஷல் வெல்பேர் டிப்பார்ட்மெண்டின்கீழ் உள்ள அதிகாரிகள் பவானிசாகரிலுள்ள பயிற்சி நிலையத்திலும், சென்னையிலுள்ள சோஷல் வெல்பேர் ஸ்கூலில் நடக்கின்ற பயிற்சி முகாமிலும் பயிற்சிகளை அளிக்கிறார்கள். ஆங்காங்கு கிராமங்களில் இவர்கள் எப்படிப்பட்ட பணிகளை ஆற்ற வேண்டுமென்பதைப்பற்றி முதல் துணைக் கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே விளக்கியிருக்கிறேன். முதியோர் கல்வித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகவும் கிராமங்களில் சுற்றுப்புறச் சுகாதாரத்தைக் கவனிக்க வேண்டுமென்பதற்காகவும் கிராமங்களில் இளைஞர் சங்கத்தை ஏற்படுத்தி தீண்டாமை, உச்ச சமூக அநீதி ஆகியவற்றை எதிர்த்துப் பிரசாரம் செய்ய வேண்டுமென்பதற்காகவும், நவீன அறிவியல் முறையில் வேளாண்மை மற்றுமுள்ள பணிகளை அணுக வேண்டுமென்பதை விளக்குவதற்காகவும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர் பணிகளும் இந்தப் பணிகளும் ஒன்ருக இருப்பதாகக் கருதுவதற்கில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் வேண்டுமானல் இவர்களைக் கலந்து அவர்கள் ஆற்றுகின்ற பணிக்கு மேலும் ஊக்கத்தை அளிக்கலாம். இவர்கள் செய்கின்ற பணிபற்றிய கையேடு ஒன்றும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தக் கையேட்டைப் பெற்றுப் படித்துப் பார்த்து இந்த இளைஞர் அணிக்கு அவர்கள் மேலும் உதவிகரமாக இருக்கலாம்.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : இந்தப் பயிற்சி பெற்றவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க முதன்மை இடம் கொடுக்கப்படுமா ? அப்படி இருந்தால் அதுபற்றி அரசாங்கம் விதிமுறைகள் பிறப்பிக்குமா ?

1972 டிசம்பர் 7]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்களுக்கு முதன்மை இடம் கொடுக்கப்படும் என்று திட்டவட்டமாகக்கூற முடியாது. ஏன் என்பதை மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் உணருவார்கள். ஆனால் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு அரசு சிரத்தை காட்டும்.

திரு. எம். தேவராசன் : இந்த இளைஞர் அணி வேறு மாநிலங்களில் எங்காவது இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வேறு மாநிலங்களில் இதுவரை இல்லை. கேரளா போன்ற மாநிலங்கள் இந்த இளைஞர் அணி பற்றிய குறிப்புகளை நம்முடைய அரசாங்கத்திமிடருந்து கேட்டிருக்கின்றன.

குளித்தலை நகருக்குக் குடிநீர் வழங்கு திட்டம்.

* 62 வின.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை நகரத்திற்குக் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம். குளித்தலை நகரத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று 23—11—1970 நாளிட்ட பொது (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்) துறை அரசு ஆணை எண் 2644-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டத்தின் வேலைகள் நிறைவேற்றப்பட்டு வரும் நிலையில் உள்ளது. இத்திட்ட வேலைகள் எல்லாம் 1973-ம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புலவர் சி. பழனிச்சாமி : மிகவும் குறைந்த நிதி வசதி உள்ள பேரூராட்சி மன்றங்கள் உள்ள பகுதிகளைப் பொறுத்தவரை அரசாங்கமே குடிநீர் வசதி செய்து கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதே அரசாங்கமும், எல்.ஐ.சி., மூலம் பெறும் கடன் தொகையுடந்தான் குடிநீர் வாரியத்தில் மூலமாகப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் அளிக்கப் பேரூராட்சி போன்ற இடங்களில் செலவழிக்கப்படுகிறது. பேரூராட்சி மன்றங்கள் முதல் கட்டமாக ஆய்வுப்பணி நடத்த ஒரு தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். அதைக்கூட அளிக்க முன் வராத பேரூராட்சி மன்றங்கள் இருக்கின்றன.